
# பரிசுத்த ஆவியினால் ஏற்படும் சபை மறுமலர்ச்சியும் தனிமனித மாற்றமும்.

சிறுவர்களுக்குக் கற்பிப்பவர்கள் R2b பாடத்தை வாசிக்கவும்.




1. **எஸ்றாவைப்போல, உங்கள் இருதயத்தையும் மனதையும் தேவ வார்த்தையால் ஆயத்தப்படுத்துங்கள்.**

பரிசுத்த ஆவியால் தினமும் புதிதாக்கப்படும் ஒரு வாழ்க்கைக்குள் விசுவாசிகளை வழிநடத்த உதவுமாறு தேவனை வேண்டுங்கள்.

- உங்கள் வாழ்க்கையிலும், விசுவாசிகளின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியின் வாழ்க்கையை மாற்றும் வல்லமைக்காக ஜெபியுங்கள்.
- அவரது புதிதாக்குதலைத் தடுக்கும் விஷயங்களை எல்லாம் வல்ல தேவன் உங்களுக்குக் காட்டட்டும். அந்த விஷயங்களை அறிக்கை இடுங்கள்.

இயேசு பிறப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னதாக, எஸ்றா என்ற ஆசாரியனும் அவனது உடன் ஊழியர்களும் இஸ்ரவேல் மக்களை அவர்களது முதல், நிரந்தரமான, தேசீய மறு மலர்ச்சிக்குள் வழிநடத்தினர். தேவ மக்கள் இன்னும் பழைய ஏற்பாட்டின் கெடுபிடியான நியாயப்பிரமாணத்துக்குள் வாழ்ந்தனர். விக்கிரக ஆராதனையாளர்களைத் திருமணம் செய்வதே அவர்களது பாவங்களில் ஒன்றாக இருந்தது.

எஸ்றாவும் மக்களும் என்ன செய்தார்கள் என்பதை **அறிந்துகொள்க - எஸ்றா 9:1-10:6** ஐ வாசிக்கவும்.

- பாவங்களுக்காக தன் வருத்தத்தை எஸ்றா எவ்வாறு வெளிக்காட்டினான் என்பதை எஸ்றா 9:3-4ல் காண்க
- எஸ்றாவின் பாவ அறிக்கை எவ்வளவு தூரத்துக்கு கவலை நிறைந்ததாக இருந்தது? என்பதை எஸ்றா 9:5-7, 13-15ல் காண்க.
- மக்கள் தங்கள் துக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதை எஸ்றா 10:1ல் காண்க.
- மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று செக்கனியா ஆலோசனை கூறினான் என்பதை எஸ்றா 10:2-3ல் காண்க.

கதை **நெகேமியா 8:1-9:3** ல் தொடர்கிறது. பல நகரங்களில் இருந்த தேவ மக்கள் ஆராதனை செய்ய ஒன்று கூடினர்.

- தேவ வார்த்தைக்கு தங்கள் மரியாதையைக் காட்ட மக்கள் என்ன செய்தனர் என்பதை நெகே.8:1-3ல் காண்க.

- ஆராதனையாளர்கள் கைக்கொண்ட மூன்று சரீர நிலைகளை (body positions) நெகே. 8:5-6 ல் காண்க.
- எஸ்றா மட்டும் போதிக்கவில்லை. மற்ற போதகர்கள் செய்தது என்ன என்பதை நெகே.8:7-8ல் காண்க.
- கேட்டுகொண்டிருந்த மக்கள் என்ன செய்தனர் என்பதை நெகே.8:9ல் காண்க.
- மக்கள் அறிக்கை இட்டது என்ன என்பதை நெகே 9:1-3ல் காண்க.

எவ்வாறு புதிதாக்கப்படுவது என்பதை புதிய ஏற்பாட்டில் காண்க

- நமது வாழ்க்கையில் **புதிய சிருஷ்டிப்பு** எவ்வாறு ஆரம்பிக்கிறது என்பதை யோவான் 3:1-6 ல் காண்க.
- ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் தேவன் புதிதாக உருவாக்கும் விஷயங்கள் என்ன என்பதை 2 கொரி. 5:17 ல் காண்க.
- தேவனுக்கு முன்பாக சுத்தமாக இருக்க, பாவத்தைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை 1 யோவான் 1:8-10 ல் காண்க.
- நாம் செய்ய வேண்டிய இரு விஷயங்கள் என்ன என்பதை 1 பேது. 2:1-3 ல் காண்க.
- நாம் செய்ய வேண்டிய இரு விஷயங்களை ரோமர் 12:1-2 ல் காண்க.

சங். 51:9-10 ல் உள்ள தாவீதின் பாவ அறிக்கையான ஜெபத்தை **மனப்பாடம் செய்க.**

**2. இந்த வாரத்தில் நீங்களும் விசுவாசிகளும் செய்ய வேண்டியவைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

- இஸ்ரவேலர்கள் செய்ததை செய்ய, உங்கள் பகுதியில் உள்ள சபைகளோடு சேர்ந்து ஏற்பாடு செய்க. சேர்ந்து ஆராதிக்கவும், பாவங்களை அறிக்கையிடவும், தேவனுடைய மகிழ்ச்சிதரும் புதிதாக்குதலை அடையவும், எல்லாரும் ஒன்று கூட திட்டமிடுங்கள்.
- விசுவாசத்தில் நீர்த்துப் போன (become cold) விசுவாசிகளை சந்தித்து பரிசுத்த ஆவியினால் இயேசுவுக்குள் புதிதாக்கப்பட உதவி செய்யுங்கள்.




**3. வரும் வார ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

**எஸ்றாவின் கதையை வாசிக்க யாராவது ஒருவரை ஆயத்தப்படுத்தவும்.** மனப்பாடமாகக் கூறலாம் அல்லது நடித்துக் காட்டலாம்.

பகுதி 1 ல் உள்ள, எஸ்றா 8-9 ல் நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி கேள்விகள் **கேட்கவும்.**

ஜெபிக்கவும். பாவங்களை அறிக்கை இடவும் எல்லோரையும் அழையுங்கள். பாலியல் ஒழுக்கக்கேடுகளை (sexual immorality) அமைதியாக தேவனிடம் அறிக்கை இடுமாறு கூறுங்கள்.

**புதிதாக்கப்பட்ட அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை விவரிக்கவும்.** குழுவாக தன் மக்களை எஸ்றா வழிநடத்தியது போல தேவ மக்கள் செய்ய வேண்டும்.

- தேவ வார்த்தையை கவனமாகக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.
- நமது பாவங்களை தேவனிடம் அறிக்கை இட்டு, பரிசுத்த ஆவியின் உதவியால் அதில் இருந்து விலகிவிட வேண்டும்.

- கிறிஸ்துவிடம் இருந்து அனுதின புதிதாக்குதலை பெறுவதற்காக, பாவங்களைத் தினமும் அறிக்கையிட ஒத்துக்கொண்டு ஒவ்வொருவரிடமும் தேவனிடமும் உடன்படிக்கை ஏற்படுத்துங்கள்.
- தேவன் அவர்களைப் புதிதாக்கும்படியாக தேவனோடு உலகப்பூர்வமான உடன்படிக்கை செய்யுமாறு விசுவாசிகளைக் கேட்டுக் கொள்ளவும்.
- உடன்படிக்கை என்பது ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் ஆழமான ஒப்பந்தம் என்பதை விவாதிக்கவும்.
- எஸ்றாவும் மக்களும் செய்ததைச் செய்ய ஒருவருக்கொருவரோடும் தேவனோடும் உடன்பாடு செய்யுமாறு விசுவாசிகளைக் கேட்கவும்.
- தினமும் பாவத்தை அறிக்கையிட ஒத்துக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் இருதயத்தை மாற்ற அனுமதியுங்கள்.
- 2 கொரி. 4:16 ஐ எல்லோரும் மனப்பாடம் செய்ய உதவுங்கள். "நாங்கள் சோர்ந்து போவதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது."

பண்டைய இஸ்ரவேலில் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்த யோசியா இராஜவைப் பற்றிய கதையை கூற அல்லது நடிக்க **சிறுவர்களுக்கு போதிக்கும் ஆசிரியர்களோடு பேசி ஏற்பாடு செய்யவும்.**

எஸ்றா 6:19-21 ல் என்ன நடந்தது என்பதை சுருக்கமாகக் கூறி **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். விளக்குக.

- பஸ்காவின் ஆட்டுக்குட்டியை புசித்து அவர்கள் பண்டிகை கொண்டாடினார்கள். இன்று, கிறிஸ்துவே நமது பஸ்காவின் ஆட்டுக்குட்டி.
- ஆசாரியர்கள் சடங்காச்சாரமாக குளித்தனர். இன்று நாம் நமது பாவத்தை அறிக்கையிட்டு கழுவப்படுகிறோம்.

அவிசுவாசிகளான புறஜாதி மக்களின் தீய பழக்கவழக்கங்களில் இருந்து, பஸ்காவை புசிப்பதற்காக மக்கள் தங்களை விலக்கிக் காத்துக் கொண்டனர். இன்று நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்டுவதன் மூலம் சிறப்பான முறையில் பஸ்காவை ஆசரிக்கிறோம்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net